# புரட்சியாளர் அம்பேத்கர்



## நினைவு
## நாளையொட்டி



### உலக மனித உரிமை நாளில்

# மலக்குழிக்குள் மனிதனை இறக்காதே...

## என வலியுறுத்தி உள்ளாட்சி மன்றங்களை

# முற்றுகை போராட்டம்

## தமிழகமெங்கும்...

**நாள் : டிசம்பர் 10, 2008 காலை 10 மணி  இடம் : நகராட்சி அலுவலகம், திண்டுக்கல்**

நாளாகி போனதால் நஞ்சானது மனித மலம் மட்டும் தானா?
இல்லை மனித மனங்களுமா?



நாறும் மலக்கிடங்கில் நாள்தோறும் உயிர்விட்டது போதும்...
ஆதித்தமிழர் சொந்தங்களே! இழிவை ஒழிக்க, இன்னுயிர் தந்திட
புறப்படு போர்க்களத்திற்கு...

# ஆதித்தமிழர் பேரவை

## திண்டுக்கல் மாவட்டம்

தொடர்பு எண் : 9364410841, 9362686866, 9360502582, 9789572305, 9442843651.

ஜெயின் கம்ப்யூட்டர் பிரிண்டர்ஸ், ஒட்டன்சத்திரம், போன் : 243578.





# புரட்சியாளர் அம்பேத்கர் நினைவு நாளையொட்டி

## உலக மனித உரிமை நாளில்

# மலக்குழிக்குள் மனிதனை இறக்காதே...

என வலியுறுத்தி ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தை

# முற்றுகை போராட்டம்

தமிழக மெங்கும்... திசம்பர் 10



நாளாகிப் போனதால் நஞ்சானது
மனித மலம் மட்டும்தானா?
இல்லை
மனித மனங்களுமா?

நாறும் மலக்கிடங்கில்
நாள்தோறும் உயிர்விட்டது
போதும்...

ஆதித்தமிழர் சொந்தங்களே
இழிவை ஒழிக்க, இன்னுயிர் தந்திட
புறப்படு போர்க்களத்திற்கு...

என,

# ஆதித்தமிழர் பேரவை

ஈரோடு மாவட்டம்

தொடர்பு எண்கள்: 93459 32391, 94874 26951, 92458 51938
94428 38615, 93605 41341, 99765 50415.

நிலா: 0424-2258503, 94430 45155



# புரட்சியாளர் அம்பேத்கர்

## நினைவு நாளையொட்டி

# மலக்குழிக்குள் மனிதனை இறக்காதே...

என வலியுறுத்தி சென்னை மாநகராட்சி அலுவலகத்தை



# முற்றுகை போராட்டம்

தலைமை :

# இரா.அதியமான்

நிறுவுனர்

நாளாகி போனதால் நஞ்சானது
மனித மலம் மட்டும் தானா?
இல்லை மனித மனங்களுமா?

நாள் : 22-12-2008

காலை 11-00 மணியளவில்



# ஆதித்தமிழர் பேரவை

தொடர்பு எண்: 98422 19108, 94439 37063, 98439 03858

ஒரு மனித சமூகமே அமைதியான முறையில் விசவாயு தாக்கி இறந்து கொண்டிருக்கிறார்கள். மலம் அள்ளும் தொழிலாளர்கள் நோயினால் பாதிக்கப்படுவதும், கல்வி, பொருளாதாரம், அரசியல் வேலை வாய்ப்புகளில் புறக்கணிக்கப்படுவதும், அடுத்த தலைமுறையும் இதே நிலைக்கு தள்ளப்பட்டு வரும் அவல நிலையும் நீடிக்கிறது.

மனிதனின் மூலம், மூத்திரம், சளி, நஞ்சு, எலி, பூனை, நாய்கள் என செத்து மிதக்கும் சாக்கடைக்குள் அடைப்பை அகற்ற மனிதனையே பயன்படுத்துகின்றனர். 21–ம் நூற்றாண்டிலும் மனிதனையே மலக்குழிக்குள் இறங்கி சுத்தம்செய்ய தூண்டுவதே நமது அரசின் சாதனைகள்.

மேலை நாடுகளில் இத்தொழிலை செய்வதற்கு எந்திரங்கள் இருந்தும் இன்னும் இங்கு ஏன் வரவில்லை? இத்தொழில் சாதியத்தின் பெயரால் நிலை நிறுத்தப்பட்டு, சமூகத்தால் அனைத்துக் கதவுகளும் அடைக்கப்பட்ட இம்மக்கள் மீது திட்டமிட்டு திணிக்கப்பட்டு வருகிறது.

நாம் தினந்தோறும் நடக்கும் சாலைகள், வீடுகள், மருத்துவமனைகள், திரையரங்குகள் என அனைத்து இடங்களிலும் மனிதனை மலக்குழியில் இறக்குவதை பார்த்து ஒதுங்கி ஒரமாக மூக்கை பிடித்துக்கொண்டு சாலையை கடக்கிறோம். சாலையில் செல்லும் நமக்கே இப்படி இருக்கிறது என்றால் தினந்தோறும் அதுதான் விதி என்று சாக்கடையில் மூழ்கும் மனிதனின் நிலை என்னவாக இருக்கும். இதை வேடிக்கைப் பார்த்துச் செல்லும் மனித நேயமுள்ள எந்த மனிதனும் இந்த நிலை நீடிக்கப் பார்த்துக் கொண்டிருக்க மாட்டான்.

தூக்குத் தண்டனைக்கு எதிராக குரல் கொடுக்கும் மனிதநேய அமைப்புகள், மலக்குழிக்குள் மனிதனை விசவாயுவால் தாக்கி அழிக்கப்படும் நிலைக்கு எதிராகவும் குரல் கொடுக்க வேண்டும்.

இத்தொழில் செய்வதால் இவர்கள் வாழ்வில் எவ்வித பாதுகாப்பும் இல்லை. தமிழகம் முழுவதும் பல இடங்களில் இத்தொழிலாளாகள் விசவாய்பு தாக்கி இறந்து இருக்கிறார்கள். அவர்களுக்கு எந்த உதவியும் அரசு செய்து தரவில்லை. பல குடும்பங்கள் இன்னும் துயரத்தில் தான் வாழ்ந்து வருகிறார்கள்.

பாதாள சாக்கடைக்குள் இனி மனிதர்கள் இறங்கி அடைப்பை நீக்குவது தடை செய்யப்படுகிறது என்று சென்னை உயர்நீதி மன்றம் கூறி உள்ளது. உயர்நீதி மன்ற ஆணையை மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் நீதிபதிகள் எச்சரித்து உள்ளனர். ஆனால் உள்ளபடியே நீதிமன்ற தீர்ப்புகளை அவமதிப்பது தனி மனிதர்களல்ல. அரசுகள் தான். 1993–ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட கையால் மலம் அள்ளுவதை தடைசெய்யும் சட்டத்தை இன்றளவும் மத்திய அரசின் ரயில்வே துறை நாள்தோறும் அலட்சியப்படுத்தியே வருகிறது. ஆனால் அத்துறை மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை தான் என்ன?

# தமிழக அரசே !

## மலக்குழியில் மனிதன் இறங்குவதை போர்க்கால அடிப்படையில் தடை செய்!

## இத்தொழிலாளர்களுக்கு உடனே மாற்று வேலை வழங்கு!

## உயர் நீதிமன்ற ஆணையை உடனடியாக நடைமுறைப்படுத்து!

## ஆதித்தமிழர் பேரவை



திச-22 காலை 10.30 மணி
மலக்குழியில் மனிதனை இறக்காதே
மாநகராட்சி
முற்றுகைபோர்
இடம்:
சென்னை
மாநகராட்சி
அலுவலகம்
தலைமை:
இரா.அதியமான்
நிறுவனர்
போராட்டத்துடன்:
ஆதித்தமிழர் பேரவை
ரீகல் பெரியார் பேருந்து நிலையம் அருகில், மதுரை-1.போன்: 2350675